செய்தி வெளியீடு எண் :161 நாள் : 24.01.2023

**"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு, சுற்றுலா மற்றும் சுற்றுலா சார்ந்த தொழிலாளர்கள் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்படுவார்கள்**

**மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி. கணேசன் அவர்கள் தகவல்**

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன் அவர்கள் தலைமையில் இன்று (24.01.2023), சென்னை, தேனாம்பேட்டை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய கருத்தரங்கு கூடத்தில், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1982-இன் கீழ் ஆலோசனைக்குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** அறிவிக்கப்பட்டவாறு, சுற்றுலா சார்ந்த தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் "சுற்றுலா மற்றும் சுற்றுலா சார்ந்த தொழில்", உடலுழைப்புத் தொழிலாளர்கள் சட்டத்தின் அட்டவணையில் சேர்த்திட ஒப்புதல் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், **"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** தலைமையிலான இவ்வாட்சி பதவியேற்ற நாளிலிருந்து புதியதாக 12 இலட்சம் தொழிலாளர்கள் தமிழ்நாடு அமைப்புசாரா நலவாரியங்களில் பதிவுப்பெற்றுள்ளார்கள்" என தெரிவித்தார்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக நிதி உதவி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பணியிட பாதுகாப்பு பயிற்சி போன்ற திட்டங்களுக்கான ஒப்புதல்கள் ஆலோசனைக் குழுவால் வழங்கப்பட்டது.

மேலும், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் ஐ.டி.ஐ மற்றும் பாலிடெக்னிக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்வி நலத்திட்ட உதவித்தொகை ரூ. 1,000/-லிருந்து ரூ.3,000/-ஆக உயர்த்தி வழங்குவதற்கும், அவ்வாரியத்தில் பதிவு பெற்ற பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு நல உதவியினை ரூ.6,000/- லிருந்து ரூ. 18,000/- ஆக உயர்த்தி வழங்கிடவும் ஒப்புதல் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் சட்டப் பேரவை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டவாறு, வாரியத்தில் பதிவு பெற்ற 500 பெண் ஆட்டோ ஓட்நர்களுக்கு சொந்தமான ஆட்டோ வாங்குவதற்கு ரூ. 1 லட்சம் மானியம் வழங்கும் திட்டத்திற்கும், அமைப்புசாரா

தொழிலாளர்கள் நல வாரியங்களுக்கு சொந்த கட்டிடம் கட்டுவதற்கும், ஆலோசனைக் குழுவால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

மேலும், அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் பயன்பெறும் பொருட்டு பொதுமக்கள் அத்தொழிலாளர் சேவையை பெறும் வகையில் "சேவை செயலி" அறிமுகப்படுத்திடவும், வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்காக ஸ்மார்ட் அட்டை வழங்குவதற்கும் ஆலோசனைக் குழு ஒப்புதல் அளித்தது.

மேற்படி ஆலோசனைக்குழு கூட்டத்தில், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் தொடர்பான 2022–23ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டன. மேலும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் தொடர்பான விவாதப் பொருட்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டன.

இவ்வாலோசனைக் கூட்டத்தில், குழுவின் உறுப்பினர்களான பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணகுமார் அவர்கள், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. முகமது நசிமுத்தீன், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயலாளர்/தொழிலாளர் ஆணையர் முனைவர், அதுல் ஆனந்த், இ.ஆ.ப., அவர்கள், நிதித்துறை அரசு துணை செயலாளர், திரு. இராமநாதன் அவர்கள், உறுப்பினர் செயலர், கூடுதல் தொழிலாளர் ஆணையர், திருமதி. சி. ஹேமலதா அவர்கள், வேலையளிப்போர் தரப்பு பிரதிநிதிகள், தொழிலாளர்கள் தரப்பு பிரதிநிதிகள், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் திரு. மு.வே. செந்தில்குமார் அவர்கள், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர், திருமதி. ஆர்.செந்தில்குமாரி அவர்கள், தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலவாரிய செயலாளர், திரு. பா. மாதவன் அவர்கள் மற்றும் தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in